# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.304/2024 | Date | : 29.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : கந்தசாமி | Calling | : |
| Father Name | : சுப்ரமணி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 29.10.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சித்தூர் கிராமம், ஒருவாப்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 27-06-2024 ம் தேதி, மாலை சுமார் 03.00 மணியளவில் வீட்டில் இருநது புறப்பட்டு குமாரபாளையம் நோக்கி எனது XL இருசக்கர வாகனத்தில் எனது மாமாவை பார்ப்பதற்காக சென்றுகொண்டிருந்தேன். சுமார் 04.00 மணியளவில் எடப்பாடி - குமாரபாளையம் சாலையில் வேலாத்தாள் கோவில் ஆசாரிபள்ளம் அருகே சாலையின் இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தபோது, குமாரபாளையத்தில் இருந்து வந்த கார் ஒன்று என்னுடைய திசையை நோக்கி ஏறி வேகமாக வந்து என்மீது மோதிவிட்டது.

2) மோதியவுடன் நான் சுமார் 10 அடி தூரம் தள்ளி விழுந்துவிட்டேன். எனக்கு இடுப்பில் எலும்பு முறிவும், காலில் எலும்பு முறிவும் ஏற்பட்டுவிட்டது. பின்னர், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று

மேல்சிகிச்சைக்காக எடப்பாடி செந்தில் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். ஆஜர் எதிரி தான் மேற்படி காரை ஓட்டி வந்த நபர் ஆவார். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Kandasamy

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>
(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.304/2024 | Date | : 29.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : முருகேசன் | Calling | : |
| Father Name | : கணேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 29.10.2025.
<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், கலியனூரில் வசித்து செண்டரிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 27-06-2024 ம் தேதி, மாலை சுமார் 04.00 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டு குமாரபாளையம் - எடப்பாடி செல்லும் சாலையில் உள்ள வேலாத்தாள் கோவில் அருகே வந்துகொண்டிருந்தேன். அப்போது, எனக்கு எதிர் திசையில் ஒரு இருசக்கர வாகனம் மண்பாதையை ஒட்டி வந்துகொண்டிருந்தது. அப்போது, குமாரபாளையத்தில் இருந்து வந்த கார் ஒன்று வலதுபுறமாக ஏறி வந்து இருசக்கர வாகனத்தின்மீது மோதிவிட்டது.

2) மோதியவுடன் சுமார் 10 அடி தூரம் சென்று விழுந்துவிட்டார். அவருக்கு இடதுபுற இடுப்பு, கண் ஆகிய இடங்களில் அடிப்பட்டுவிட்டது. ஆஜர் எதிரி தான் மேற்படி விபத்தை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் ஆவார். அடிப்பட்ட நபரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Murugesan